**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.51/2021 |
| Deposition of Witness for | : PW – 4 |
| Name and Age | : கிருஷ்ணமூர்த்தி (வயது 50) |
| Father / Husband Name | : மாரியப்பன் |
| Occupation | : நடத்துநர் |
| Village | : பெரியமிட்டஹள்ளி |
| Taluk | : காரிமங்கலம் |

**நாள்** – 29.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பெரியமிட்டஹள்ளியில் குடியிருந்துக்கொண்டு பேருந்தில் நடத்துநராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 06.04.2019ம் தேதி மதியம் சுமார் 02.20மணியளவில் மகேந்திரமங்கலம் முனியப்பன் என்பவரது மாந்தோப்பு அருகில் நான் ஓசூரில் இருந்து பாலக்கோடு வழியாக தர்மபுரிக்கு DNC பேருந்தில் வந்துக்கொண்டிருந்தேன். அந்த பேருந்தில் நான் நடத்துநராக பணியில் இருந்தேன். ஆஜர் எதிரி பேருந்தில் ஓட்டுநராக பணியில் இருந்தார். பாலக்கோட்டில் இருந்து ஜிட்டாண்ட அள்ளி நோக்கி வந்த இருசக்கர வாகனம் எங்கள் பேருந்தின் மீது மோதியது. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மறுநாள் போலிசார் காவல்நிலையத்தில் வைத்து எங்களை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சி செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

25 வருடங்களாக DNC பேருந்தில் நடத்துநராக பணியில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரி விபத்திற்கு முன் 4–5 மாதங்களாக தான் DNC பேருந்தில் ஓட்டுநராக பணியில் இருந்தார். ஆஜர் எதிரி DNC பேருந்தில் தான் முதலில் ஓட்டுநராக பணியில் சேர்ந்தார் என்றால் அதற்கு முன்னால் என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது. சாதரணமாக எங்கள் பேருந்து தனியார்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.29 18:07:22 +0530

பேருந்து என்பதால் வேகமாக தான் செல்வோம் என்றால்  எப்போதும் அந்தநேரம் மெதுவாக தான் செல்வோம். மற்ற நேரத்தில் கொஞ்சம் வேகமாக செல்வோம். அந்த விபத்து ரோட்டின் இடதுபக்கமாக நடந்தது என்றால் அது வளைவான ரோடு ரோட்டின் இடது பக்கமாக தான் விபத்து ஏற்பட்டது. இருசக்கர வாகனம் ரோட்டின் இடதுபக்கமாக தான் வந்துக்கொண்டிருந்தது. அந்தபக்கம் தான் விபத்து ஏற்பட்டது. எங்களுடைய பேருந்து ஓட்டுநர் பேருந்தை வேகமாக ஓட்டிவந்து இடதுபக்கமாக வந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது என்றும், ஆஜர் எதிரி நான் வேலை செய்யும் கம்பெனியில் ஓட்டுநராக வேலை செய்வதால் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் வளைவான ரோடு என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரி நான் வேலை செய்யும் கம்பெனியில் வேலை செய்யவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் பேருந்திற்குள் டிக்கெட் புக்கிங் கையில் எழுதிக் கொண்டிருந்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ சாலை வளைவான பகுதி என்றால் லேசாக வளைந்திருக்கும். இருசக்கர வாகனத்தில் பயணித்த நபர் தான் வாகனத்தின் மீது வலது பக்கம் மோதி விபத்து ஏற்படுத்திக்கொண்டார். விபத்தில் இறந்தவர் மதுபோதையில் இருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.29 18:07:29 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.51/2021 |
| Deposition of Witness for | : PW – 5 |
| Name and Age | : நடராஜ் (வயது 56) |
| Father / Husband Name | : சின்னசாமி |
| Occupation | : விவசாயம் |
| Village | : மகேந்திரமங்கலம் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 29.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 5**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது மகேந்திரமங்கலத்தில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 06.04.2019ம் தேதி மதியம் சுமார் 02.30மணிக்கு மகேந்திரமங்கலம் அருகே முனியப்பன் மாந்தோப்பு அருகே நானும், சண்முகம் என்பவரும் அங்கு நின்று பேசிக்கொண்டிருந்தேன். அப்போது குமரேசன் என்பவர் இருசக்கர வாகனத்தில் ஜிட்டாண்டஹள்ளி நோக்கி சென்றுக்கொண்டிருந்தார். அப்போது DNC பேருந்து ஒசூரில் இருந்து பாலக்கோடு நோக்கி வரும்போது குமரேசனின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. குமரேசன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். குமரேசனின் உறவினர்கள் சம்பவ இடத்திற்கு வந்து அவரை ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். அங்கு குமரேசனின் தாயார் காவேரியம்மாளும் வந்தார். பின் இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. போலிசார் சம்பவ இடத்திற்கு அன்று மாலை 05.00மணிக்கு வந்து வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வைமகஜர் அ.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் சேர்ந்து சண்முகம் என்பவரும் கையொப்பம் செய்தார். விபத்தின்போது பேருந்து ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.29 18:07:35 +0530

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த சமயம் மதியம் 02.30மணி இருக்கும். சம்பவ சாலை வளைவான பகுதி என்றால் லேசாக வளைந்திருக்கும். சம்பவ இடத்தில் பொதுவாக அனைத்து வாகனங்களும் மெதுவாக தான் செல்லும் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த குமரேசன் பேருந்தின் வலது பக்கம் மோதினார் என்றால் சரியல்ல. குமரேசன் விபத்து சமயத்தில் மதுபோதையில் இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பார்வைமகஜரில் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தேன். பார்வைமகஜரில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் அதில் இறந்தவரின் பிரேதத்தை வரைந்திருந்தார்கள். எனக்கு காவல்நிலையம் செல்லும் பழக்கம் உள்ளது என்றால் செல்வேன். விபத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், காவல்நிலையத்தில் பார்வைமகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.29 18:07:41 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.51/2021 |
| Deposition of Witness for | : PW – 6 |
| Name and Age | : சண்முகம் (வயது 55) |
| Father / Husband Name | : கோபாலசாமி |
| Occupation | : விவசாயம் |
| Village | : சீங்கேரி |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 29.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 6**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது சீங்கேரியில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 06.04.2019ம் தேதி பகல் 02.20மணிக்கு மகேந்திரமங்கலத்தில் DNC பேருந்து வளைவில் ஏறிவந்து எதிரே ஜிட்டாண்டஹள்ளி நோக்கி சென்ற குமரேசனின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியது. அப்போது நானும், நடராஜனும் அங்கு இருந்தோம். பின் குமரேசனின் உடலை தனியார் ஆமபுலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போலிசார் அன்று மாலை சுமார் 04.00மணிக்கு சம்பவ இடம் வந்து விசாரணை செய்தார்கள் நான் நடந்ததை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். விபத்து நடந்த சமயம் பேருந்து ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பேருந்து ஓசூரில் இருந்து பாலக்கோடு நோக்கி வந்தது. விபத்தில் இறந்த குமரேசன் மகேந்திரமங்கலத்தில் இருந்து ஜிட்டாண்டஹள்ளி நோக்கி சென்றார். சம்பவ சாலை லேசான வளைவான சாலை ஆகும். சம்பவ சாலை பெரும்பாலும் மெதுவாக செல்லும் என்றால் பேருந்து வேகமாக வந்தது. குமரேசன் சாலையின் இடதுபக்கத்தில் இருந்து பேருந்தின் வலது பக்கம் மோதினார் என்றால் சரியல்ல. விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் தெரியாது. நான்

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.06.29 18:07:49 +0530

பேருந்து மோதியதை பார்த்தேன். நான் சம்பவ இடத்தில் பாரவைமகஜரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் என எனக்கு தெரியாது. இறந்தவர் எனது அக்கா மகன் ஆவார். நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றாலும், இறந்தவர் எனது அக்கா மகன் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.29 18:07:55 +0530

Judicial Magistrate,
Palacode.